ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**NATIONAL FILM CORPORATION OF SRI LANKA**




රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**Ministry of Public Administration & Management**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை

# 2015

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| நிருவாக அறிக்கை | 02 - 23 |
| நிலுவை அறிக்கைகளில் இலாப நட்டக் கணக்குடனான குறிப்புகள் | 24 - 63 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 64 - 79 |

## அறிமுகம்

திகதி : 2016.08.24 எனது இலக்கம் : என்எப்சீ/103/05/02/96

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
கௌரவ கயந்த கருணாதிலக்க அவர்கள்
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
இலக்கம். 163, கிருளப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொடை,
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**<u>இலங்கைத் திரைப்படக் கூட்டுத் தாபனம் - வருடாந்த அறிக்கை 2015</u>**

1980 இலக்கம் 45 கொண்ட சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட 1971 இலக்கம் 47 இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் 32 (1) பந்தி மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (1) பந்தியின் பிரகாரம் 2015 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஆவணங்களுடன் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையினை முன்வைக்கின்றேன்.

1. 2015 ஆம் ஆண்டின் கூட்டுத் தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள் மற்றும் அதற்குரியதான அறிக்கைகள்.
2. 2015 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான கூட்டுத்தாபத்தின் இலாப நட்டக் கணக்கு, இணைந்த குறிப்பு மற்றும் அத்திகதிக்கான ஐந்தொகை
3. 2015 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான கணக்காய்வாளர் அறிக்கை.

இப்படிக்கு – நம்பிக்கையுள்ள,

சட்டத்தரணி தீபால் சந்திரரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# <u>நிருவாக அறிக்கை</u>


01. அறிமுகம்

02. பணிப்பாளர் சபை

03. உள்நாட்:டு திரைப்படத் தயாரிப்பு

04. மனிதவள மற்றும் நிறுவன நிருவாகம்

05. திரைப்பட விளம்பரம் / டெலி விளம்ரபங்கள்

06. திரைப்படக் கண்காட்சி

07. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

08. சினிமா கலாசாரம் மற்றும் கல்வி நடவடிக்கைகள்

09. உள்நாட்டு வழங்கள்கள் - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

10. திரைப்படக் களஞ்சிசாலை

11. சட்டவியல் நடவடிக்கைகள்

12. நிதியியல் நடவடிக்கைகள்

13. திரைக்கூடம்

14. ஆய்வு நடவடிக்கைகள்

15. நலன்புரி

16. விளையாட்டுச் சங்கம்

17. மத நடவடிக்கைகள்

18. வைத்திய நிவாரண முறைகள்

19. தொழிற் சங்கம்

20. நன்றி

## 01. <u>அறிமுகம்</u>

1980 இலக்கம் 45 கொண்ட சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட 1971 இலக்கம் 47 இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் 32 (1) பந்தி மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (1) பந்தியின் கீழ் கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க அவர்கள் மற்றும் கணக்காய்வாளருக்கு முன்வைக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2014ஆம் ஆண்டு தொடர்பான அறிக்கை.

2014ஆம் ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற மேற்படி அறிக்கை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் 45ஆவது செயற்பாட்டு வருடத்திற்குறியதானதாகும்.

## 02. <u>பணிப்பாளர் சபை</u>

2015 ஆம் ஆண்டினுள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாப பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களை கொண்டமைந்துள்ளது.

1. சட்டத்தரணி திரு. தீபால் சந்திரரத்ன - தலைவர்
2. திரு. சம்பத் சுபசிங்க ஆரச்சி - செயற்பாட்டுப் பணிப்பாளர்
3. கலாநிதி எஸ்.கே.எம்.டீ. தர்சனி குணதிலக்க - ப.ச. அங்கத்தவர்கள் (உத்தியோகபூர்வ)
4. விசேட வைத்தியர் அனில் சமரகோன - ப.ச. அங்கத்தவர்கள் (உத்தியோகபூர்வ)
5. திருமதி ஜீ.வி.பி. தயாரத்ன - ப.ச. அங்கத்தவர்கள் (உத்தியோகபூர்வ)
6. திரு. நயண ஹெட்டியாரச்சி - ப.ச. அங்கத்தவர்கள் (உத்தியோகபூர்வ)
7. திரு. அமில் அல்விஸ் - ப.ச. அங்கத்தவர்கள் (உத்தியோகபூர்வ)
8. திருமதமி. எஸ். .கொடகந்த அவர்கள் - திரைசேறி அங்கத்தவர்
9. சட்டத்தரணி டப்ளியு.கே. விக்கிரமஆரச்சி - பணிப்பாளர் சபை செயலாளர்

## 03. <u>தேசிய திரைப்படத் தயாரிப்பு</u>

### 3.1. தேசிய திரைப்படத் தயாரிப்புக்காக வேண்டி பதிவு செய்தல்

2015 வருடத்திற்காக வேண்டி பதிவு செய்யப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை 40 ஆகும்.

பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா. 2,000/- தொகையினை கூட்டுத்தாபனம் அறவிட்டுக் கொள்ளும்.

3.2 தேசிய திரைப்படத் தயாரிப்பிற்காக வேண்டி வழங்கப்படுகின்ற கடன் வசதிகள்

3.2.1 **திரைக்கூட சேவைக் கடன் வசதிகள்**

அங்கீகரிக்கப்பட்ட திரைக்கூட சேவை கடன் வசதிகளின் பெறுமதி ரூபா. 400,000/- ஆகும். இந்த வருடத்தினுள் திரைக்கூட சேவைக் கடன் வசதிகள் எந்தவொரு திரைப்படத் தயாரிப்பாளரும் விண்ணப்பித்திருக்கவில்லை.

3.2.2 **திரைப்படத் தயாரிப்பிற்காக வேண்டி கடன் வசதிகளை வழங்குதல்**

இந்த வருடத்தினுள் திரைப்படத் தயாரிப்பிற்காக வேண்டி தயாரிப்புக் கடன் வசதிகள் விண்ணப்பிக்கப்படவில்லை.

3.2.3 **விசேட கடன் வசதிகள்**

இந்த வருடத்தினுள் எந்தவொரு விசேட கடன் வசதிகளும் வழங்கப்படவில்லை.

3.2.4 **பிரதிகள் அச்சிடலுக்காக வேண்டி கடன் வசதிகள் வழங்குதல்**

இந்த வருடத்தினுள் பிரதிகள் அச்சிடலுக்காக வேண்டி கடன் வசதிகளும் வழங்கப்படவில்லை

3.2.5 **விளம்பர கடன் வசதிகள் வழங்குதல்**

இந்த ஆண்டினுள் கூட்டுத்தாபன (ரித்மா) சபையின் கீழ் 2015.10.23 பொதுமக்கள் காட்சிக்காக வேண்டி வெளியிடப்பட்ட சுகந்த கொக்கா திரைபடத்தின் விளம்பர நடவடிக்கைகளுக்காக வேண்டி 05 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பொன்றினை (வட்டியில்லாமல்) திரைப்பட வருமானத்திலிருந்து தயாரிப்பாளரின் ஒரு பகுதியிலிருந்து முதற் கொடுப்பனவின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.2.6 **உப தலைப்பு கடன் வசதிகள் வழங்குதல்**

இந்த வருடத்தினுள் எந்தவொரு திரைப்படத்திற்காக வேண்டியும் உபதலைப்பு கடன் வசதிகள் வழங்கப்படவில்லை.

3.3 திரைப்படக் கலைஞர்கள் மற்றும் **தொழில்நுட்பவியலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் தொழில்நுட்ப ஆளடையாளப் பத்திரத்தினை வழங்குதல்**

பல வருடங்களாக இந்த அலுவலானது உரியவாறு இடம்பெறாததுடன், இந்த வருடத்தினுள் தயாரிப்பு /விற்பனை/ஆய்வுப் பிரிவினால் புதிய நிகழ்ச்சியாக தொழில்நுட்பவியலாளர்களை பதிவு செய்தல் மற்றும் 107 புதிய ஆளடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

3.4 **உள்நாட்டுத் திரைப்படங்களுக்காக வேண்டி வெளிநாட்டு நடிகர் நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களை இணைத்துக் கொள்வதற்காக வேண்டி அனுமதிக்கப்பட்ட கட்டணத்தினை அறவிட்டுக் கொள்ளல்.**

இந்த வருடத்தினுள் உள்நாட்டு திரைப்படங்களுக்காக வேண்டி இணைத்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்காக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படவில்லை.

3.5 **தேசிய கதைகள் /வர்த்தக அறிக்கை நிகழ்ச்சிகள் படப்பிடிப்பிற்காக வேண்டி புகைப்படக் கருவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அனுமதிக்கப்பட்டதற்காக வேண்டி மேற்கொள்கின்ற அறவீடு.**

கதைத் திரைப்படம் 01 மற்றும் வெளிநாட்டு வர்த்தக நிகழ்ச்சிகள் 01 இற்காக வேண்டி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.6 **விசேட கலைஞர்களை கௌரவித்தல்.**

- திரைப்படப் பணிப்பாளர் திரு. நிஹால் பிரனாந்து அவர்களுக்கு வைத்திய நிவாரணமாக ரூபா. 50,000/- நிதிக் கொடுப்பனவு வழங்குதல்.

3.7 **திரைப்பட இறக்குமதி**

வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை 25

இதன் பிரகாரம், 2015ஆம் ஆண்டினுள் திரைப்பட இறக்குமதிக்காக வேண்டி காட்சிப் படுத்தல் சபையின் 05இனூடாக அனுமதி வழங்கப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தமிழ் திரைப்படம் - 58
- ஹிந்தி திரைப்படம் - 20
- ஆங்கிளத் திரைப்படம் - 49

**3.8 திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்காக வேண்டி கூட்டுத்தாபன பொறுப்புக்கள்**

3.8.1 **ஓய்வூதியதம் வழங்கல் : (ஓய்வூதியக் கொடுப்பனவு ஒருவருக்கு தளா ரூபா. 2000/- ஆகும்.)**

- ஜனவரி – பெப்ரவரி (62 ஓய்வூதியக்காரர்களுக்காக) - ரூ. 248,000.00
- மார்ச்சு - ஜுன் (61 ஓய்வூதியக்காரர்களுக்காக) - ரூ. 488,000.00
- ஜுலை (60 ஓய்வூதியக்காரர்களுக்காக) - ரூ. 120,000.00
- ஆகஸ்ட் -செப்தெம்பர் (59 ஓய்வூதியக்காரர்களுக்காக)- ரூ. 236,000.00
- ஒக்டோபர் - டிசம்பர் (58 ஓய்வூதியக்காரர்களுக்காக) - ரூ. 348,000.00

3.8.2 **2015ஆம் ஆண்டினுள் இறந்து போன ஓய்வூதியத்தினை உடையவர்கள்.**

- திரு. யூ.எஸ்.எஸ். ஹமீட் (2015.05.04)
- திரு. மொஹமட் இஸ்மாயில் லால் (2015.06.06)
- திரு. மர்சலின் எஸ். பெரேரா (2015.10.06)
- ஓய்வூதியம் உரித்துடைய திரு. நொயேல் விதானகே அவர்கள் மரணித்துள்ளார்கள். (நாட்டியக் கலைஞர்)

**3.9 <u>தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்</u>**

3.9.1. **விசேட கலைஞர்களை கௌரவித்தல்**

- கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் 9ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்விற்காக வேண்டி ரூபா. 100000/- நிதி உதவி வழங்கியமை.
- பிரபல நடிகர் திரு. பர்டி குணதிலக்க அவர்களின் 91ஆவது பிறந்தி தினத்திற்காக வேண்டி ரூபா. 100000/- நிதி உதவி வழங்கியமை.

3.9.2 **வெளிநாட்டு கதைகள் / வர்த்தக நிகழ்ச்சிகள் படமாக்குவதற்காக வேண்டி அனுமதி வழங்கல்**

- கதைத் திரைப்படங்கள் 01, அறிக்கைத் திரைப்படங்கள் 34 மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் 15 இற்காக அனுமதிக் கட்டணம் அரவிடப்பட்டுள்ளது.

## 04. பணியாளர்கள் மற்றும் ஸ்தாபன நிருவாகம்

### 4.1 ஆளணிச் சபை

| | | |
|---|---|---|
| 2015.01.01 முதல் சேவையாளர்களின் எண்ணிக்கை | - | 140 |
| 2015இனுள் இணைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை | - | - |

**2015ஆம் ஆண்டினுள் விலகிச் சென்றவர்களின் எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை | - | 05 | |
| சேவையிலிருந்து இராஜினாமா செய்தவர்கள் | - | 02 | |
| | | | 07 |
| | | | 133 |
| நிரந்தர ஆளணிச் சபையினர் | - | 133 | |
| தலைவர் | - | 01 | |
| செயற்பாட்டுப் பணிப்பாளர் | - | 01 | |
| நாளாந்தக் கொடுப்பனவு | - | 01 | 03 |
| 2015.12.31ஆந் திகதிக்கு மொத்த பணியாளர்கள் | - | | 143 |

### 4.2 நிறுவன நிருவாகம் மற்றும் பணியாளர்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல்

நிறுவனத்தின் சேவை நிருவாகத்திற்குரியதாக பின்பற்றல்களை மேற்கொள்கின்ற வழிமுறைகளை முன்னோக்கிக் கொண்டு சென்று சேவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்தல்.

## 05. திரைப்பட விளம்பரங்கள்/சினே எட்

### 5.1 வருடத்தினுள் நிவைேற்றிய விடயங்கள்

**5.1.1. காட்சிக்காக வெளியிடப்பட்ட உள்நாட்டுத் திரைப்படங்களின் பத்திரிகை விளம்பர நடவடிக்கைகள்**

- I சதியட மட ரட்ட பாரதென்ன
- ii அநாத்த தூபத்த
- iii போனிக்கா
- iv லென்டின் சிங்ஞோ
- v சஞ்ஜனா
- vi சுகந்த கொக்கா
- vii நோனே மகே சுந்து நோனே

**5.1.2. இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுத் திரைப்படங்களின் பத்திரிகை விளம்பர நடவடிக்கைகள்**

- I NH 10 – Hindi
- ii Amari Adur Kahan - Hinidi
- iii Alone – Hindi
- iv ABCD - Hindi
- v 36 Wayyathinile - Tamil

**5.1.3. திரையரங்குகளில் காட்சிப்படுத்தப்படுகின்ற திரைப்படங்கள் தொடர்பான விளம்பர நடவடிக்கைகள்**

- லிபர்ட்டி லைட் - கொள்ளுபிடிய
- அமிட் லைட் - மஹரகமை
- சிடி சினிமா – கல்கிஸ்ஸை

**5.1.4. ஊடக விளம்பர நடவடிக்கைகள்**

- தேசிய சினிமாவின் 68ஆவது நினைவு விழா மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 43ஆவது ஆண்டு விழாவிற்காக வேண்டி ஊடக விளம்பர நடவடிக்கைகள்
- 2015.03.20ஆந் திகதி முதல் 2015.03.22ஆந் திகதி வரை இடம்பெற்ற தாய்லந்து திரைப்பட விழா
- 2015.04.04ஆந் திகதி இடம்பெற்ற கலாநிதி லெஸ்டர் ஜேம்ஜ் பீரிஸ் அவர்களின் 96ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்
- 2015 ஏப்ரல் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் இடம்பெற்ற "கங்ஸ விலக்" திரைப்பட விழா மற்றும் ஏப்ரல் 6ஆந் திகதி இடம்பெற்ற சினிமா உரை நிகழ்ச்சி
- 2015.07.03ஆந் திகதி இடம்பெற்ற "இலங்கையில் ஆன்மீகத்தினை உயர்த்துவதற்காக சினிமா" என்ற தலைப்பில் இடம்பெற்ற சினிமா உரை
- 2015 ஒக்டோபர் 01ஆந் திகதி இடம்பெற்ற உலக சிறுவர் தினத்திற்காக வேண்டி "Life of Pie" காட்சிப்படுத்தியமை
- 2015.10.23ஆந் திகதி முதல் 2015.10.25ஆந் திகதி வரை இடம்பெற்ற யப்பான் திரைப்பட விழா
- 2015.11.04ஆந் திகதி முதல் 2015.11.07ஆந் திகதி வரை இடம்பெற்ற கொரியா திரைப்பட விழா

## 06. <u>திரைப்பட கண்காட்சிகள்</u>

**6.1 கூட்டுத்தாபான காட்சி சபை (ரித்மா என்டர்பிரைஸஸ்)**

- 2015ஆம் ஆண்டினுள் ரித்மா சபையின் கீழ் திரையரங்குகள் 58 செயற்பட்டது.
- புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தம்மிக – வெல்லவாய, ரெஜின மாலினி – தம்புத்தேகமை போன்ற திரையரங்குகள் 2015ஆம் ஆண்டில் திரைப்படக் காட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

**6.2 திரைப்படங்கள் வெளியீடு**

- 58 திரையரங்குகளுக்காக வேண்டி ரித்மா சபை திரைப்படங்களை வெளியிட்டுள்ளது.
- 2015ஆம் வருடத்தினுள் ரித்மா சபை மற்றும் ஏனைய சபைகளுடன் ஒன்றிணைந்து திரைப்படங்களை வெளியிட நடவடிக்கைகள் எடுத்துள்ளன.
- ரித்மா சபை மூலம் சிங்களத் திரைப்படங்கள் 06 வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

- இந்த வருடத்தின் ஜனவரி முதல் வழங்கலாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட 22 தமிழ்த் திரைப்படங்கள், 10 ஹிந்தி திரைப்படங்கள் ரித்மா சபை மற்றும் ஏனைய சபை திரையரங்குகளில் மற்றும் ஒன்றிணைந்து வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

  (கூட்டுத்தாபன சபைக்கு வழங்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து (கோடா) மற்றும் ஏனைய சபைகளின் பகுதிகளிலிருந்து (கோடா) திரைப்படங்களினைப் பெற்றுக் கொண்டு ரித்மா சபையினால் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..)

## 6.3 திரைப்பட வாடகை

எமது சபையினால் ஏனைய சபைகளுக்கு வழங்கப்படுகின்ற திரைப்படங்களுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரைப்பட வாடகைப் பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. (2014 செப்டம்பர் மாதம் வரை)

- லங்கா பில்ம்ஸ் டிரிஸ்டிபியுடர் கம்பனி (பிரைவட்) லிமிடட் - ரூ. 6,386,339.37
- மூவி பிரடியுஸர் என்ட் இம்போர்ட்ஸ் கம்பனி (பிரைவட்) லிமிடட் - ரூ. 1,691,228.75
- சினிமா என்டர்டேன்மன்ட் (பிரைவட்) லிமிடட் - ரூ. 12,614922.10
- ஈ.ஏ.பி. பில்ம்ஸ் என்ட் தியடர்ஸ் (பிரைவட்) லிமிடட் - ரூ. 10,030,732.14

எமது சபையிலிருந்து ஏனைய சபைகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட திரைப்படங்களுக்காக வேண்டி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. (2015 செப்டம்பர் மாதம் வரை)

- லங்கா பில்ம்ஸ் டிரிஸ்டிபியுடர் கம்பனி (பிரைவட்) லிமிடட் - ரூ. 1,454,463.99
- மூவி பிரடியுஸர் என்ட் இம்போர்ட்ஸ் கம்பனி (பிரைவட்) லிமிடட் - ரூ. 3,705,944.21
- சினிமா என்டர்டேன்மன்ட் (பிரைவட்) லிமிடட் - ரூ .12,748,925.43
- ஈ.ஏ.பி. பில்ம்ஸ் என்ட் தியடர்ஸ் (பிரைவட்) லிமிடட் - ரூ. 26,591,327.90
- ரிபோ வைப்பு

2015ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை ரூ.24,169,989.75 வைப்பிலிருந்து 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்தம்பர் மாதம் வரை கொமிஸ் பணமாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்தது.

ரூ. 21,424,689,45

- 2015ஆம் ஆண்டினுள் பல்வேறு கூட்டு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக வேண்டி நிவாரண விலையின் கீழ் உதவி பெற்றுக் கொள்வதற்காக வேண்டி திரைப்படங்கள் வழங்குதல்

- பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்காக வேண்டி இராணுவ முகாமிற்காக சலுகை விலைக்கு திரைப்படங்கள் வழங்குதல்

## 07. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் கணக்காய்வாளரின் அவதானத்தின் கீழ் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வருடத்தினுள் செயற்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளது.

| | |
|---|---|
| திருமதி. எஸ். .கொடகந்த அவர்கள் | - திரைசேறி அங்கத்தவர் - குழுத் தலைவர் |
| திருமதி சிரியான ஹங்வெல்ல | - உள்ளக கணக்காய்வாளர் - குழுச் செயலாளர் |
| விசேட வைத்தியர் அனில் சமரகோன | - பணிப்பாளர், வைத்தியர் ஆய்வு நிறுவனம், குழு அங்கத்தவர் |
| கலாநிதி எஸ்.கே.எம்.டீ. தர்சனி குணதிலக்க | - பணிப்பாளர், அரசாங்க தகவல் திணைக்களம் குழு அங்கத்தவர் |
| திரு. அமில் அல்விஸ் | - குழு அங்கத்தவர் |
| திரு. கே.சீ.பீ. சேநாநயாக்க | - கணக்காய்வாரள் திணைக்களம் குழு அங்கத்தவர் |

வருடத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 03 இடம்பெற்றுள்ளன.

## 08. <u>சினிமா கலாசாரம் மற்றும் கல்வி நடவடிக்கைகள்</u>

### 8.1 கல்வி நிகழ்ச்சிகள்

| நோக்கம் | பிரதான செயற்பாடுகள் | வெளியீட்டு அட்டவணை | பௌதீக முன்னேற்றம் | | % | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | | % | நிதியினைப் பெற்றுக் கொள்ளும் விதம் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வருடாந்த இலக்கு | 2015.12.31 ஆந் திகதிக்கு ஒட்டுமொத்த வளர்ச்சி | | வருடாந்த ஒதுக்கீடு | 2015.12.31 ஆந் திகதிக்கு ஒட்டு மொத்த வளர்ச்சி | | | |
| **கல்வி, ஊக்குவிப்பு மற்றும் கலாசாரம்** | | | | | | | | | | |
| 1. இலங்கையில் உயர் சினிமா கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்காக வேண்டி தேவையான சாஸ்த்திரவியல் மற்றும் எண்ணக்கரு அடிப்படையினை அமைத்தல் | சினிமாவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறியினை நடாத்துதல் (2015) | பதிவுசெய்யப் படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை | 50 | 31 | 62 | 2.5 | 0.5 | 20 | பாடநெறிக் கட்டணம் மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | உதவிப் பொது முகாமையாளர் - கல்வி, ஊக்குவிப்பு மற்றும் கலாசாரம் |
| 2. சினிமா கலாசாரத்தினை வளர்ப்பதனை நோக்காய்க் கொண்டு சினிமா எழுத்தறிவினை வளர்ச்சி செய்தல் | சினிமா தொடர்பான கூற்றுக்களை வெளியிடுதல்<br>1. அச்சியல் சஞ்சிகை<br>2. அச்சியல் கூற்றுகள் | அச்சியல் சஞ்சிகைகளின் எண்ணிக்கை<br>அச்சியல் கூற்றுகளின் எண்ணிக்கை | 3000<br>2000 | 3000<br>- | 100<br>- | 0.4<br>0.3 | 0.4<br>- | 100<br>- | அநுசரனை நிறுவனங்கள் மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | |
| சினிமா தொடர்பான எழுத்தாளர்களிடமிருந்து வளவாளர்களை பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், எதிர்பார்த்த தரத்தில் கிரந்தத்தினை திட்டமிட்டுக் கொள்ள முடியாமல் போனது | | | | | | | | | | |
| 3. சினிமா நேயர்களை ஊக்குவிப்பதன் மூலமாக சினிமாத் துறை மற்றும் தொழிலினை வளர்த்தல் | “வாழ்க்கைக்கு சினிமா” இரசனை நிகழ்ச்சி /செயலமர்வு | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 8 | 7 | 87.5 | 0.2 | 0.06 | 30 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. வளர்ந்து வருகின்ற சினிமாக் கலைஞர்கள் சினிமா தொடர்பில் தொடர்ச்சியான பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல் | குறுந் திரைப்படத் தயாரிப்புப் போட்டி /விழா | திரைப்பட விழா | 1 | - | - | 0.45 | - | - | அநுசரனை நிறுவனங்கள் மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | உதவிப் பொது முகாமையாளர் - கல்வி, ஊக்குவிப்பு மற்றும் கலாசாரம் |
| நாட்டில் நிலவிய அரசியல் நிலைமையுடன் தேசிய மட்டத்தில் விழாவொன்றினை நடாத்துவது சிரமமான நிலையில் உள்ளது. | | | | | | | | | | |
| 5. சினிமாவில் புதிய அனுகுமுறைகளை அறிந்து கொள்ளல், விமர்சனங்கள், விளமபரங்களை தேடுதல் | சினிமா உரை நிகழ்ச்சிகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 4 | 2 | 50 | 0.12 | 0.08 | 66 | | |
| 6. திரைப்பட இரசனை தொடர்பாக நேயர்களின் பங்களிப்பினை வளர்த்தல் | கல்வியியல் திரைப்படங்களை காட்சிப் படுத்தல் | காட்சிப்படுத்தப்படுகின்ற திரைப் படங்களின் எண்ணிக்கை | 8 | 10 | 125 | 0.1 | 0.069 | 69 | அநுசரனை நிறுவனங்கள் ம மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | |
| 7. இலங்கையில் உயர்வான சினிமா கலாசாரமொன்றினை உருவாக்குவதற்காக வேண்டி தேவைப்படுகின்ற சாஸ்திரவியல் மற்றும் எண்ணக்கரு அடிப்படையில் அமைப்பதற்குத் தேவையான வாசிகசாலை வசதிகளை வழங்குதல். | சினிமா வாசிகசாலை புதுப்பித்தல். (கிரந்தங்கள் மற்றும் திரைப்படங்கள்) | | | | | | | | | |
| | 1. கிரந்தங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்தல் | கிரந்தங்கள் மற்றும் சஞ்சிகைககளின் எண்ணிக்கை | 20 | 51 | 255 | 0.02 | 0.015 | 75 | | |
| | 2. Blu Ray மற்றும் DVD திரைப்பட பிரதிகளை கொள்வனவு செய்தல். | பிரதிகளின் எண்ணிக்கை | 50 | 66 | 132 | 0.02 | 0.0198 | 99 | | |

## 09. உள்நாட்டு வழங்கல்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

- திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபன தேவைப்பாடுகளுக்கு இணங்க தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளுடன் சேவைகளை குறிப்பிட்ட வழிமுறைகளுக்குக் கீழ் வழங்குதல்.

- திரையரங்குகளுக்காக வேண்டி நுழைவுச் சீட்டுக்களை அச்சிட்டு வழங்கல்

- திரையரங்குகளுக்காக வேண்டி சினிமா ஆர்க் காபன் இறக்குமதி

- கூட்டுத்தாபனத்திற்கு பிரயோசனத்திற்காக வேண்டி நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல்

- பிரதி பன்னல், கணினி உள்ளிட்ட உதிரிகள், குளிரூட்டி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் மற்றும் கணினி நிகழ்ச்சிகளுக்காக வேண்டி தேவையான சந்தர்ப்பங்களின் போது உரிய அங்கத்துவ நிறுவனங்களுடன் சேவை ஒப்பந்தங்களை செய்து கொள்ளல்

- பிரதி பன்னல், கனிணி அடங்கலான உதிரிகள், குளிரூட்டி, தொலைநகல் இயந்திரம் புதுப்பித்தல் மற்றும் சேவை வழங்கல்

- 2015/2016ஆம் ஆண்டுகளுக்காக வேண்டி கூட்டுத்தாபன அலுவலக சுற்றுப் புறத்திற்காக வேண்டி பாதுகாப்புச் சேவை மற்றும் நலன்புரிச் சேவைகளை வழங்கல்

## 10. திரைப்படக் களஞ்சியவரை

### 10.1 அலுவல்கள்

- திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுத் திரைப்படங்கள் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களை பொறுப்பெடுத்து பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

- அந்தத் திரைப்படங்களைப் பொறுப்பெடுத்து தரப் பரிசீலனை செய்து நாடகக் கட்டுப்பாட்டு சபைக்கு முன்வைத்தல் மற்றும் அதன் அனுமதியின் பிரகாரம் மீண்டும் தர அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு இறக்குமதியாளர்/தயாரிப்பாளர் விநியோக சபைக்கு பொறுப்பளித்தல் அல்லது திரையரங்கிற்கு பகிர்ந்தளித்தல்.

- கூட்டுத்தாபன சபையின் ஊடாக வரிசைப்படுத்தப்பட்ட திரைப்படங்கள் குறிப்பிட்ட திரையரங்குகளுக்கு புகையிரதம் மற்றும் கையினால் திரைப்படங்களை அனுப்புதல் மற்றும் உரியவாறு வரவழைத்துக் கொள்ளல்.

- அந்தத் திரைப்படங்களுக்கு உரியதான முன் காட்சி திரவங்களை திரையரங்குகளுக்கு நேரகாலத்துடன் அனுப்பி வைத்தல்

- திரைப்படக் களஞ்சியசாலைக்குக் கிடைக்கின்ற அனைத்துத் திரைப்படங்கள் மீண்டும் பரிசீலனை செய்து ராக்கைகளில் அடுக்கி வைத்தல்.

- ராக்கைகளில் உள்ள திரைப்படங்களை அடிக்கடி பரிசீலித்துப் பார்த்தல்

- தரப் பரீட்சையின் மூலம் பெற்றுக் கொண்ட பணத்தொகையானது ரூபா. 12 இலட்சங்கள் ஆகும்.

- திரைப்படக் களஞ்சியசாலையிலுள்ள பழைய திரைப்பட மறுசீரமைப்பு செய்யப்பட்டு மீண்டும் காட்சிப்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் அமைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தினை ஈட்டிக் கொடுத்தல்

- பழைய திரைப்படங்களிலிருந்து ஓடுவதற்கு தகுந்த சுமார் 03 திரைப்படங்களை களஞ்சியவரையில் வைத்து ஏனைய அனைத்து திரைப்படங்களையும் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் திரைப்படக் களஞ்சியசாலையின் பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக நிகழ்த்துதல்.

- திரைப்படக் களஞ்சியவரையில் குவிந்துள்ள ஒப்பந்தக் காலம் முடிவுற்ற திரைப்படங்கள் மற்றும் பழுதடைந்துள்ள திரைப்படங்கள் உரிமையாளர்களுக்கு அறியப்படுத்தி பின்னர் எரித்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கு எஞ்சியுள்ள சாம்பல்களை விற்பனை செய்து கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளல்.

- சிங்களத் திரைப்படங்கள் 21 பதிவு செய்யப்பட்டுள்ளது.

- உயர் ஆவணக் களஞ்சியத்தில் சேமித்து வைத்துள்ள சிங்களம் திரைப்படங்களின் தரங்களை பரிசீலனை செய்து பார்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

## 11. <u>சட்டவியல் நடவடிக்கைகள்</u>

### 11.1 <u>அலுவல்கள்</u>

- கூட்டுத்தாபனம் கட்சிக்காரரான வழக்கு தொடர்பாக கூட்டுத்தாபனம் சார்பாக பதிலாள் கோர்த்தல் மற்றும் உரிய நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்காக வேண்டி முன்னிற்றல்

- தொழிலாளர் திணைக்களத்தின் முன்னிலையில் தொழிலாளர் பிரச்சினைக்களுக்காக வேண்டி கூட்டுத்தாபனத்திற்காக வேண்டி முன்னிற்றல்.

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்கள், திரைப்படங்கள் விநியோகம் தொடர்பாக மற்றும் திரைப்படத் தயாரிப்பு /திரையரங்கு சேவைகள்/ பிரதிகள் அச்சீடு/ உபதலைப்பு போடுதல்/விளம்பர நடவடிக்கைகளுக்காக வேண்டி கடன் தொகை வழங்குதல் மற்றும் சேவை வழங்கல் அனைத்து சட்டரீதியான ஒப்பந்தங்கள் அமைத்தல் மற்றும் கையொப்பமிடல்

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன உதவிச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல், பொருட்கள் கொள்வனவு செய்தல், கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் வேறு நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து சட்டரீதியான ஒப்பந்தங்கள் அமைத்தல் மற்றும் கையொப்பமிடல்

- அன்றாடத் தேவைகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவினாலும் அனுப்பப்படுகின்ற சட்டரீதியான பிரச்சினைகளுக்காக வேண்டி அறிவுரைகள் வழங்குதல்.

**11.2 2015ஆம் ஆண்டினுள் செயற்பட்ட மற்றும் செயற்படுகின்ற வழக்குகள் தொடர்பான விபரம்**

1. முறையீட்டு நீதிமன்ற வழக்கு எண் : 590/2007
2. முறையீட்டு நீதிமன்ற வழக்கு எண் : 590/2007
3. கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற வழக்கு எண் : 97659/5/11
4. மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் : DMR 1126/2012 - சினே சிட்டி திரையரங்குகள் 4இல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தாபன பொறுப்புகளை செலுத்தாதது தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.
5. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் DSP/00026/2013,DSP/00027/2013,DSP/00028/2013,DSP/00029/2013,DSP/00030/2013
6. மேன்முறையீட்டு நீதிமன்ற மனு இலக்கம் : CA (Writ) Application No : 144/2013
7. தொழிலாளர் தீர்மான சபை வழக்கு எண் : 13/41/2013
8. தொழிலாளர் தீர்மான சபை வழக்கு எண : 2/435/2014
9. தொழிலாளர் தீர்மான சபை வழக்கு எண் : 2/47/2014
10. DMR 2603/2013 வலாபட்ட திரைப்படம்
11. CHC 370/2014 சுபா திரைப்படம்
12. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் : DSP 140/2015
13. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் : DMR 00030 /2015
14. சிலாபம் மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் : SPL 4160/2015
15. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் : DSP 00052/2015
16. கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற எண் : MC 30392/5
17. தொழிலாளர் திணைக்களத்தில் இடம்பெற்ற பரிசீலனை
    - I. முன்னாள் கூட்டுத்தாபன சேவையாளர் - திரு. டப்.எஸ். பொன்சேக்கா உள்ளடங்கிய அணியினர்
    - II. தொழிலாளர் திணைக்கள முறையீட்டு எண் : IR/15/19/2012 - கூட்டுத்தாபன சேவையாளர் திரு. சமித திஸாநாயக்க அவர்கள்

## 12. <u>நிதி நடவடிக்கைகள்</u>

12.1

| | 2014 | 2015 |
|---|---|---|
| கண்காட்சியனால் கிடைக்கப்பெற்ற வருமானம் | 28,337,822 | 47,198,999 |
| சினிமா காபன் | 2,496,080 | 2,307,960 |
| காகிதாதிகள் | 1,185,398 | 1,342,237 |
| உதிரிப் பாகங்கள் | 5,507,545 | 21,168 |
| சினே எட்ஸ் | 364,188 | 390,026 |
| திரைக்கூடம் | 1,481,969 | 2,288,688 |
| மொத்த இலாபம் | 36,807,353 | 20,813,275 |

2014ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் 53.6 மில்லியன் ரூபாக்களாகும். அது 2014ஆம் வருடத்தில் 39.6 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2014 இலும் பார்க்க 2015இல் விற்பனை வருமானம் 14 மில்லியன் ரூபாக்களால் அதிகரித்துள்ளது. இதற்குப் பிரதான காரணமாக விநியோக கொமிஸ் 78.3%, வெளிநாட்டு விநியோக கொமிஸ் 96.4%, மற்றும் கூட்டுத்தாபன நிதியம் 39.5%, அதிகரித்தமையை குறிப்பிடலாம். நேயர்களின் ஆதரவு கிடைக்கின்ற படைப்புக்கள் உருவாதல் மற்றும் வெளிநாட்டு திரைப்பட இறக்குமதி இந்த அதிகரிப்புக்களில் தாக்கம் செலுத்தியுள்ளது.

12.2 இந்த வருடத்தினுள் கடந்த ஆண்டிலும் பார்க்க மொத்த வருமானம் 32.4 மில்லியன் ரூபாக்களால் அதிகரித்துள்ளது.

சேவையாளர் ஊதியம் 15.22 மில்லியன் ரூபாக்களாலும், சேவையாளர் பணிக்கொடை வேறாக்கல் 16.4 மில்லியன் ரூபாக்களாலும் அதிகரிப்பானது பிரதான விடயமாக தாக்கம் செலுத்தியுள்ளது,

12.3 வருடத்தினுள் திரைசேறியினால் மீண்டெழும் செலவிற்காக வேண்டி 80 மில்லியன் ரூபாக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. வருடத்தின் மொத்த இலாபம் 59.1 மில்லியன் ரூபாக்களாகும். கடந்த வருடத்தினுள் மொத்த இலாபம் 38.1 மில்லியன் ரூபாக்களாகும்.

திரைசேறியினால் கிடைக்கப்பெற்ற மீண்டெழும் வருமானம் பார்க்ககும் போது 2015ஆம் ஆண்டின் மேலதிகம் 20 மில்லியன் ரூபாக்களாகும்.

12.4 திரைசேறியினால் அங்கீகரிக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து இந்த வருடத்தில் 30 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது.

### 12.5 தயாரிப்புக் கடன் மற்றும் திரையரங்குக் கடன்கள்

திரைப்பட காட்சிகளின் போது பிரதிகளின் விளம்பர நடவடிக்கைகளுக்காக வேண்டி கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 12.6 முதலீடுகள்

வருடத்தின் இறுதியில் நிலையான வைப்புக்களில் 16 மில்லியன் ரூபாக்களும், திரைசேறி பற்றுச் சீட்டுக்களில் 85 மில்லியன் ரூபாக்களும் மற்றும் ரிப்போ வைப்புக்களில் 104 மில்லியன் ரூபாக்களும் குறுங்காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணங்களில் 49 மில்லியன் ரூபாக்கள் கூட்டுத்தாபனத்தின் சேவையாளர்களின் பணிக்கொடை நிதி என்பதுடன், திரையரங்குகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பினை பணமான 2.4 மில்லியன் ரூபாவும் மேல் குறிப்பிடப்பட்ட நிதிகளுள் உள்ளடங்கும்.

12.7 சேவையாளர்களுக்கு ஊதியம் வழங்குவது திரைசேறியிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்தாகும். இந்த காரணத்தின் அடிப்படையில் வருடத்தின் வருமான வரி வேறாக்கப்படவில்லை.

## 13 திரைக் கூடம்

தயாரிப்புப் படிமுறையில் நிலவுகின்ற திரைப்படங்களுக்காக வேண்டி தொழில்நுட்ப சேசைவகள் மற்றும் வசதிகளை வழங்கல் திரைக்கூடத்தின் அலுவலாகும்.

இதன் பிரகாரம் வழமைபோல் 2015ஆம் ஆண்டில் திரையரங்குகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளினால் தேசிய தயாரிப்பாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வசதிகைள வழங்கியுள்ளது.

1. ஒலிப் பிரிவு (Digital)
2. தொகுப்புப் பிரிவு (Digital)
3. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி படமாக்கல் அரை

### 13.1 நிறைவேற்றப்பட்டுள்ள விடயங்கள்

1 சரசவி திரைக்கூடத்தினால் திரைப்படத் தொழிலுக்கு வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப வசதிகளுக்கு இணங்க சுமார் 24 தேசிய திரைப்படங்கள் தொழில்நுட்ப சேவைகள் இந்தக் காலத்தினுள் வழங்கப்பட்டுள்ளது.

2 திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் படமாக்குவதற்காக வேண்டி வசதிகள் திரைக்கூடத்தின் உள்ளக அரை மற்றும் திரைக்கூட தாழ்வாரம் உட்பட பூங்காவினையும் வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய காலத்தினுள் 05 திரைப்படங்கள் உள்ளடங்களாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 06 இனையும் படமாக்குவதற்காக வசதிகள் வழங்கியுள்ளது.

3 திரைக்கூடத்தில் ஒலிப் பிரிவில் ஒரு அரையானது சர்வதேச தரங்களுக்கு இணங்க பல்லியல் ஒலிப்பதிவு செய்வதற்காக வேண்டி புதுப்பித்தல்.

இந்தத் திட்டங்களுக்காக வேண்டி அனைத்து நடவடிக்கைகளும் முடிவுறுத்தப்பட்டு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், விலைமனுக்களை ஒப்பிட்டுப் பார்த்து டென்டரினை வழங்க வேண்டியுள்ளது.

4 திரைக்ககூடத்தின் டிஜிடல் தொகுப்புப் பிரிவிற்காக வேண்டி புதிய தொழில்நுட்பத்திற்கிணங்க புதிய தொகுப்பு முறைமையொன்றினை கொள்வனவு செய்து உயர் தரத்திலான வர்ணங்களை சரிசெய்யும் (Color Correction) மற்றும் முப்பரிமாண உருவங்களை நிர்மாணிக்கின்ற (Computer Generated image) தொழில் நுட்பத்தினை முன்னேற்றுதல்.

திரைப்படமொன்றினை அச்சிடுவதற்கு முன்னர் நிறங்களை சரிசெய்தல் (Color Correction) மற்றும் கணிணியுடனான உருவங்களை நிர்மானித்தலை (Computer Generated image) அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு திரைப்படத் தொழிலிற்கு தேவையானவாறு இந்தப் பிரிவினை புதுப்பித்தலுக்காக வேண்டி தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக டென்டர் கோரப்பட்டுள்ளதுடன், விலைமனுக்கள் ஒப்பிட்டுப் பார்த்து டென்டர் வழங்கலை மேற்கொள்ள வேண்டும்.

5 ஒலிக்கூடத்தில் B.A.W. ஜயமான்ன அரை பல்நோக்குடைய கற்பித்தல் அரையொன்றாக புதுப்பிப்பித்து படம் பிடித்தல், சினிமா பாடநெறிகள் மற்றும் சினிமா தொடர்பான விசேட சந்தர்ப்பங்களுக்காக வேண்டி வாடகைக்கு விடுவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

### 13.2 திரைக்கூடத்தில் வெளியக தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக் கொண்ட திரரைப்படங்கள் - 2015

**ஒளிப்பிரிவு**

1. சுது சமனலி
2. வஸ்தண்டு ராவய
3. The Rainbow
4. குறுந் திரைப்படம்
5. ஹோ கானா பொக்குனு
6. தரு மிதுரோ
7. சுரங்கனா
8. ஆலோகோ உதபாதி
9. பொட கொந்தனம் மட மொக்கோ
10. பத்தினி
11. ஆதர கதாவக்
12. The Undecided
13. Dr. நவரியன்
14. வீர வர்ன
15. டைகர்
16. மெந்த பொட்டக் பெத்தக் நெஹ
17. ஆதர பூஜாஸன
18. வெஸ்வலாகத் தருணிய
19. Jobless Douglas
20. TV Commercial
21. உலத் எகய் பிலத் எகய்
22. பம்பர வசந்தய
23. Education Progrmame – Sri Lanka Foundation

**ரேகையல்லாத தொகுப்புப் பிரிவு**

1. சுரங்கனா
2. குமரி கன்யாவி
3. ஆத்ம வர்சா
4. நடந்நெதின தின்னா
5. ஒழுவ ஜபன் கந்த ஜர்மன்
6. Documenrty (Dharmaloka Collage)
7. Documenrty (Mr. Sujths Kuruppu)

**திரைக்கூடத்தில் படமாக்கப்பட்ட திரைப்படங்கள் / தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 2015**

1. Tokyo Cement All Island School Quiz
2. Derana – Dell Studio
3. Sri Lanka Rupavahini Corporation – Muthuhara Programme
4. Sri Lanka Rupavahini Corporation – Rin Bright Star
5. Asia Broadcasting (Pvt) Ltd. – Hiru Unplugged
6. சுவர்னவாகினி நிறுவனம் - பெனடோல் சகனாபிமானி
7. களுஹிமி – திரைப்படம்
8. வீரவர்ண – திரைப்படம்
9. Jobless Douglas - திரைப்படம்
10. அத்துரு மித்துரு - திரைப்படம்
11. நடந்நெதிவ தின்னா - திரைப்படம்

**13.3 வருடத்தினுள் திரைக்கூடத்தின் பெறுகைகள்**

| | |
|---|---|
| ஒலிப்பிரிவு | 2,239,988 |
| தொகுப்புப் பிரிவு (NLE) | 143,475 |
| படப்பிடிப்பு | 2,324,667 |
| மொத்தப் பெறுகைகள் | 4,708,130 |

## 14. <u>பரிசீலனை நடவடிக்கைகள்</u>

**14.1 வருடத்தினுள் பரிசீலனைப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட அலுவல்கள்**

- திரையரங்குகளை நிர்மானிப்பதற்காக வேண்டி காணி கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை ஒன்று சேர்த்தல்
- புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல், மற்றும் மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீண்டும் திறந்து வைத்தல்

- திரையரங்கனுளை பரிசீலனை செய்தல்
- வெளிநாட்டுப் படப்பிடிப்பு ஆய்வு

## 14.2 வருடத்தினுள் பரிசீலனைப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட அலுவல்கள்

- சிலாபம் யோஜித திரையரங்கு
- அம்பலங்கொடை உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு
- Saxon கொள்ளுபிடிய உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு
- ராஜகிரிய உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு
- தினக் சினிமா – பொரலஸ்கமுவை திரையரங்கு
- நாகம் உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு – சுன்னாகம்
- ரீகல் - யாழ்ப்பாணம் உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு
- கொட்டாவ உத்தேசிக்கப்பட்டுளள திரையரங்கு
- My Lan உத்தேசிக்கப்பட்டுள்ள திரையரங்கு
- தெனியாய புதிய மினி திரையரங்கு
- யாழ்ப்பாணம் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திரையரங்கு
- கெசோன் - ஜாஎல
- ஸ்கை லைட்ஸ் - மாளபை

## 14.3 புதிய திரையரங்குகள் ஆரம்பித்தல் மற்றும் மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீண்டும் திறந்து வைத்தல்.

**திறக்கப்பட்ட புதிய திரையரங்குகள்**

- ரெஜின சினிமா - தம்புத்தேகமை
- சிடி லைன் சினிமா - கல்கிஸ்சை

**மூடப்பட்டிருந்த திரையரங்குகள் மீண்டும் திறந்து வைத்தல்**

- பிரஜா சினிமா – வெல்லவாய

## 14.4 திரையரங்குகளை பரிசீலனை செய்தல்

ஆய்வுப் பிரிவின் பிரதான அலுவலாக அமைவது, திரையரங்குகளை ஆய்வு செய்தலாகும். இதன் பிரகாரம் நாடு முழுவதுமுள்ள திரையரங்குகள் 1246 தடவை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திரையரங்குகளிலிருந்து நிலுவைப் பணத்தினைப் பெற்றுக் கொ்ளளல்**

திரையரங்குகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைப் பணத்தினை சேர்த்துக் கொள்வதற்காக வேண்டி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் நாடு பூராகவுமுள்ள திரையரங்குகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த கூட்டுத் தாபன நிதி மற்றும் திரைப்பட வாடகைகளிலிருந்து ரூபா. 2,304,798.96 இனை அறவிட்டுக் கொண்டுள்ளது.

**திரையரங்குகளில் நிலவுகின்ற முறைகேடுகள் பற்றி பற்றுச்சீட்டு வழங்குதல்.**

பரிசீலனை அதிகாரிகளினால் திரையரங்குகளை பரிசீலனை செய்யும் போது பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்காக வேண்டி கூட்டுத்தாபன சுற்றுநிருபத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2015ஆம் ஆண்டிற்காக வேண்டி ரூபா. 401,020/- பெறுமதி வாய்ந்த 132 பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னய வருடங்களில் வழங்கப்பட்டுள்ள பற்றுசீட்டுகளினால் இந்த வருடத்தில் அறவிட்டுக் கொண்டுள்ள் 52 பற்றுச்சீட்டுகளுக்கான நிதி ரூபா. 808,540 /- ஆகும்.

### 14.5 வெளிநாட்டு படப்பிடிப்பு ஆய்வுகள்

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகின்ற வியாபார விளம்பரங்கள், திரைப்படங்கள் மற்றும் அறிக்கை நிகழ்ச்சிகள் படப்பிடிப்பு ஆய்வு நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. இதன் பிரகாரம் 2015ஆம் ஆணடினுள் மேற்படி படப்பிடிப்புகள் 37 ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## 15. <u>நலன்புரிகள்</u>

கூட்டுத்தாபன நலன்புரி சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் கூட்டத்தின் நடவடிக்கை, கூட்டத்தின் அங்கத்தவர்கள் நலன்புரிக்காக வேண்டி இந்த வருடத்தினுள் செயற்பட்டது.

## 16. விளையாட்டுச் சங்கம்

வருடத்தினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் வெற்றிகள் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டன.

- கூட்டுத்தாபன ஆளணிச் சபை கலந்து கொண்டு புத்தாண்டு விழாக்கள் நடாத்தப்பட்டது.
- ஜனசது சேவை எல்லே, கரம் விளையாட்டுப் போட்டிகளில் வீரர்களை பங்கேற்கச் செய்தமை
- ஜனசது சேவை எல்லே, கரம் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பீ பிரிவின் வெற்றியினை பெற்றுக் கொண்டது.
- உள்ளக கரம் விளையாட்டு போட்டிகள் நடாத்தி வீரர்களை தரப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றது.
- கரம் விளையாட்டுக்குத் தேவையான காய்கள், 12 ஸ்டைகர் ஸ்டூல்கள் பெற்றுக் கொள்ளல்.

## 17. <u>சமய நடவடிக்கைகள்</u>

### 17.1 பௌத்த சங்கம்

- கூட்டுத்தாபன சேவையாளர்களின் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்காக வேண்டி அப்பியாசக் கொப்பிகளை வழங்குதல்
- வெசாக், பொசான் நோன்மதி விழாக்கள் தொடர்பாக ஆன்மீக உரைகள் நடாத்துதல்
- வெசாக் விழாவிற்காக வேண்டி கோபி மற்றும் பிஸ்கட் அன்னதானங்கள் நடாத்துதல்
- கூட்டுத்தாபன சேவையாளர்களுக்கு பௌத்த சங்கத்தினால் (பன்சிய பனஸ் ஜாதக) வேதநூலின் முதற் பிரதி வழங்குதல்
- கூட்டுத்தாபன சுற்றுப் பரப்பினுள் புத்தர் சிலையொன்றினை நிர்மாணித்து கூட்டுத் தாபன சேவையாளர்களுக்கு மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல்
- கூட்டுத்தாபன சேவையாளர்களுக்கும் மற்றும் பௌத்த சங்கத்தின் பங்களிப்புடன் அருப்பதற்காக இருந்த இரண்டு பசுக்களை விடுவித்தல்.

### 17.2 கிறிஸ்துவ சங்கம்

கூட்டுத்தாபன ஆளணிச் சபையின் பிள்ளைகளின் பங்கேற்புடன் வருடாந்த நத்தல் விழாவினை நடாத்துதல்.

## 18. <u>வைத்திய உதவி முறைமை</u>

அங்கத்துவப் பணம் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகின்ற நிதியின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வைத்திய உதவி முறைமை இந்த வருடமும் செயற்பட்டதுடன், அதன் நிருவாகக் குழு கீழ் வருமாறு.

| | | |
|---|---|---|
| திரு. சுனில் விக்கிரமநாயக்க | - | குழுத் தவைர் |
| திருமதி. ரன்ஜனி பெரேரா | - | குழு அங்கத்தவர் (பதில் பொது முகாமையாளர்- நிருவாகம் மற்றம் மனித வளம்) |
| திரு. நாமல் வீரபாகு | - | குழு அங்கத்தவர் (நிருவாக அதிகாரி – நிருவாகம் மற்றும் மனித வளங்கள்) |
| திரு. ஆர்.பி. திஸ்ஸ | - | குழு அங்கத்தவர் ( செயலாளர் - இலங்கை சுதந்திர சேவையாளர் சங்கம்) |
| திரு. கே.ஆர். வின்சன் | - | குழு அங்கத்தவர் (தேசிய சேவையாளர் சங்கம்) |
| திரு. சுகித இலங்ககோன் | - | குழு அங்கத்தவர் (தலைவர் - திரைப்படக் கூட்டுத்தாபன சேவையாளர் சங்கம்) |
| திரு. எச்.டீ. அசங்க குணதிலக்க | - | அலுவல்கள் அதிகாரி |

18. **<u>தொழிற் சங்கம்</u>**

தேசிய சேவையாளர் சங்கம், இலங்கை சுதந்திர சேவையாளர் சங்கம், மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபன சேவையாளர்கள் சங்கம் இந்த வருடத்தினுள் நிருவாக அதிகார சபையுடன் இணைந்து புரிந்துணர்வுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

19. **<u>நன்றி</u>**

2015ஆம் வருடம் வெற்றிகரமான பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி கூட்டுத்தாபன ஆளணிச் சபையினர் மிகவும் பொறுப்புடன் மற்றும் விடாமுயற்சியுடன் சேவையாற்றியுள்ளனர். இந்த சேவைகளை பணிப்பாளர் சபை சிறப்பாக கௌரவித்துள்ளதுடன், அவர்களுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

**சட்டத்தரணி தீபால் சந்திரத்ன**
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2015.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கானது
## விரிவான வருமானக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2015 | 2014 | காட்சிகள் | திரை யரங்குகள் | தயாரிப்பு | பொது நிருவாக செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| விற்பனை | 03 | 53,594,147 | 39,591,535 | 47,589,025 | 2,288,688 | - | 3,716,434 |
| குறைக்கப்ப்பட்டது : விற்பனை செலவு | 04 | 2,866,206 | 7,341,871 | - | 149,384 | - | 2,716,822 |
| அன்னளவு இலபாம் | | 50,727,941 | 32,249,664 | 47,589,025 | 2,139,304 | - | 999,612 |
| குறைக்கப்பட்டது : செலவு | | | | | | | |
| சேவையாளர் சேவை முயற்சிகள் | 05 | 77,611,315 | 62,390,237 | 11,701,951 | 10,812,685 | 4,819,283 | 50,277,396 |
| பிரயான மற்றும் வழங்கல் கொடுப்பனவு | 06 | 429,651 | 808,155 | 2,318 | 16,206 | 500 | 410,627 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 07 | 6,145,388 | 7,028,356 | 4,950 | 1,681,174 | 12,935 | 4,446,329 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் கழித்தல் | 08 | 28,406,798 | 29,487,741 | - | 6,144,298 | - | 22,262,500 |
| போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | 09 | 14,386,447 | 18,496,419 | 368,708 | 1,866,123 | 900,893 | 11,250,723 |
| வாராக் கடனிற்காக வேண்டி சேதமாக்கப்பட்ட பொருத்தப்பாடுகள் | | 10,995,465 | 3,750,161 | 8,957,236 | - | 2,038,229 | - |
| பணிக்கொடைகளை வேறாக்குதல் | | 20,485,019 | 4,005,290 | 3,457,933 | 3,292,941 | 686,520 | 13,047,625 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழிலநுட்ப கலைஞர்கள் நிதியத்திற்காக வேண்டி வேறாக்குதல் | | 200,000 | 200,000 | - | - | 200,000 | - |
| பங்கு சேதங்கள் | | - | 21,143 | - | - | - | - |
| | | 158,660,083 | 126,187,502 | 24,493,096 | 23,813,427 | 8,658,360 | 101,695,200 |
| பொது நிருவாக செலவுகள் உள்வாங்குதல் | | - | - | 15,333,231 | 14,168,013 | 6,314,774 | (35,816,018) |
| செயற்பாட்டு இலாபம் - நட்டம் | | 158,660,083 | 126,187,502 | 39,826,327 | 37,981,440 | 14,973,134 | 65,879,182 |
| இணைத்துக் கொண்டவை : வேறு வருமானம் | | (107,932,142) | (93,937,838) | 7,762,698 | (35,842,136) | (14,973,134) | (64,879,570) |
| வருடத்தின் நட்டம் - இலாபம் | 10 | 48,745,417 | 55,745,191 | | | | |
| இணைத்துக் கொண்டவை : திரைசேறி பெறுகைகள் | | (59,186,725) | (38,192,647) | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 80,000,000 | 75,000,000 | | | | |
| | | 20,813,275 | 36,807,353 | | | | |
| குறைக்கப்பட்டது : வரிக்காக வேறாக்கப்பட்டவை | | - | - | | | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | | 20,813,275 | 36,807,353 | | | | |
| குறைவு / மேலதிகம் | | | | | | | |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31 ஆந் திகதி**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| அங்கத்துவம் வகிப்பது | | | |
| நிலையான சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | **11** | 356,557,037 | 368,801,813 |
| நீண்ட கால முதலீடு | **12** | 127,000 | 127,000 |
| | | 356,684,037 | 368,928,813 |
| அசையும் சொத்துக்கள் | | | |
| குறகிய கால முதலீடுகள் | **13** | 207,087,271 | 181,279,365 |
| பங்குகள் | **14** | 9,329,064 | 11,909,411 |
| கடனாளிகள் | **15** | 140,875,826 | 123,136,192 |
| பல்வேறுபட்ட கடனாளிகள் | **16** | 159,015,837 | 149,472,335 |
| வைப்பு மற்றும் பிற்கால கொடுப்பனவு | **17** | 3,357,237 | 10,810,753 |
| நிதி மற்றும் வங்கி மீதிகள் | **18** | 67,844,504 | 21,578,961 |
| | | 587,509,739 | 498,187,017 |
| முழு சொத்துக்கள் | | 944,193,776 | 867,115,830 |
| இடப்பட் முதலீடுகள் | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனங்கள் | | 10,000,000 | 10,000,000 |
| ஒட்டுமொத்த இலாபம் | | 334,063,659 | 314,730,054 |
| வேறு ஒதுக்கீடுகள் | | 123,482,759 | 123,482,759 |
| வழங்கல்கள் | | 467,546,418 | 448,212,813 |
| அசையாத சொத்துக்கள் | **19** | 146,944,856 | 136,862,813 |
| பணிக்கொடை வேறாக்கள் | **20** | 49,392,704 | 34,060,813 |
| | | 196,337,560 | 170,923,626 |
| குறைக்கப்பட்டது.: அசையும் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக்கள் | **21** | 2,474,227 | 2,484,227 |
| திரைப்பட வாடகை கடன் உரிமையாளர்ச | **22** | 242,661,692 | 208,610,799 |
| வேறு கடன் உரிமையாளர்கள் | **23** | 35,173,879 | 36,884,365 |
| | | 280,309,798 | 247,979,391 |
| மொத்த பொறுப்புக்கள் | | 944,193,776 | 867,115,830 |

இந்த நிதிக் கூற்று இலங்கை கணக்கீட்டு தரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டது

| ……………………………………….. | ……………… | ……………… |
|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் ப.க. - நிதி | தலைவர் | பணிப்பாளர் |

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
303, பௌத்தாலோக்க மாவத்தை
கொழும்பு 07
2016.05.30

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2015.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கானது
## உரிமை மாற்றம் தொடர்பான கூற்று

| | உரிமையான மூலதனம் ரூ. | ஒட்டுமொத்த இலாபம் ரூ. | மூலதன ஒதுக்கீடு ரூ. | றுமதிப்பீடு செய்யப்பட் ஒதுக்கீடு ரூ. | வேறு ஒதுக்கீடுகள் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **2014.01.01ஆந் திகதிக்கு மீதி** | 10,000,00 | 277,922,702 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 411,405,461 |
| வருடத்தின் இலாபம் | | 35,327,682 | | | | 35,327,682 |
| **2014.12.31ஆந் திகதி மீதி** | 10,000,00 | 313,250,384 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 446,733,143 |
| வருடத்தின் இலாபம் | - | 20,813,275 | - | - | - | 20,813,275 |
| **2015.12.31ஆந் திகதி மீதி** | 10,000,00 | 334,063,659 | 499,898 # | 115,153,399 # | 7,829,462 # | 467,546,418 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31 ஆந் திகதி**
**நிதி நிலைமைக் கூற்று**

| | 2013 | 2012 |
|---|---|---|
| **பணிச் செயற்பாடுகளினால் பெற்றுக் கொள்ளப்பட் நிதி** | ரூபா. | ரூபா. |
| வரி குறைப்பதற்கு முன்னரான தூய இலாபம் (குறைக்கப்பட்டது) | (59,186,725) | (38,192,647) |
| தயாரிப்புக் கடன் படி வட்டி | (396,064) | - |
| நிலையான மற்றும் திரைசேறி பற்றுச்சீட்டு வட்டி | (11,111,070) | (10,267,443) |
| | (70,693,859) | (48,460,090) |
| **நிதி பிரழ்வு தொடர்பாக அதிகாரப்படுத்தாத விடயங்களுக்கான பொருத்தங்கள்** | | |
| குறைப்புகள் | 21,160,625 | 20,762,242 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 20,485,019 | 4,005,290 |
| சமநிலையற்ற கடன்களுக்கான ஒதுக்கீடுகள் | 10,995,465 | 3,750,161 |
| பராமரிப்புச் செலவு ஒதுக்கீடுகள் | - | 616,923 |
| அரச வழங்கல்களை வருமானத்தில் அடையாளம் காணல் | (19,917,957) | (19,300,177) |
| வாகனங்களை நீக்கியதினால் பெற்ற வருமானம் | - | (2,611,420) |
| கடன் வட்டி வெட்டி நீக்குதல் | - | 211,878 |
| | (37,970,707) | (41,025,193) |
| **கடந்த கால வரையரைக்கான விடயங்கள்** | | |
| கடந்த கால வரையரைக்கான விடயங்களுக்காக வேண்டி பொருத்தங்கள் | (1,479,671) | 4,598,518 |
| செயற்பாட்டு மூலதன விடயங்களின் வேறுபாடுகளுக்கு முன்னரான பணி இலாபம் | (39,450,378) | (36,426,675) |
| **செயற்பாட்டு மூலதன விடயங்களின் மாற்றங்கள்** | | |
| தொகை (குறைவு) | 2,580,347 | 1,270,711 |
| கடனாளிகள் (அதிகரிப்பு) | (38,278,601) | (108,760,402) |
| வைப்புகள் மற்றும் எதிர்கால கொடுப்பனவுகள் (குறைவு) | 7,453,516 | (354,010) |
| வைப்புகள் (அதிகரிப்பு) | (10,000) | 37,500 |
| கடன் உரிமையாளர்கள் (அதிகரிப்பு) | 34,050,893 | 102,679,959 |
| வேறு கடன் உரிமையாளர்கள் (குறைவு) | (1,710,483) | (1,049,236) |
| | (35,364,706) | (42,602,152) |
| **குறைக்கப்பட்டது :** | | |
| பணிக்கொடை கொடுப்பனவு | (5,153,128) | (2,169,965) |
| | (40,517,834) | (44,772,117) |
| **முதலீட்டு செயற்பாடுகளினால் பெறப்பட்ட பிரவாகங்கள்** | | |
| தயாரிப்பு கடன் வட்டி | 396,064 | |
| நிலையான மற்றும் திரைசேறி பற்றுச்சீட்டு வட்டி | 11,111,070 | 10,267,443 |
| நிலையான சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளல் | (8,915,851) | (15,146,200) |
| திரைசேறி பற்றுச் சீட்டுகள் மற்றும் நிலையான முதலீடுகள் | (25,807,906) | (56,480,881) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் பெறப்பட் நிதி | | 4,535,556 |
| திரைசேறி பெறுகைகள் | 110,000,000 | 93,100,000 |
| நிதி மற்றும் நிதிக்கு சமனான விடயங்களினால தூய அதிகரிப்பு | 46,265,543 | (8,496,199) |
| வருட ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் மீதி | 21,578,961 | 30,075,160 |
| வருடா இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களுக்கான மீதி | **67,844,504** | **21,578,961** |

## நிதி அறிக்கை தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

### கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம்

1. கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான கணக்குப் புத்தகம் வைத்திருத்தல் தொடர்பாக,

2. கூட்டுத்தாபனத்தின் நிதி செயற்பாடு மற்றும் நிதி நிலைமை தொடர்பான உண்மையான மற்றும் சாதாரன முன்வைப்பிற்காக வேண்டி 1995 இலக்கம் 15 கொண்ட இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு தரச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு இணங்க கணக்கு அமைத்தல் தொடர்பாகவும் மற்றும்

3. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் மற்றும் ஊழல் மற்றும் முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக வேண்டி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியது.

# 1. பொதுவான தகவல்கள்

### 1.1.1 இட அமைவு மற்றும் சட்டவியல் நிலைமை

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் 1971 இலக்கம். 47 கொண்ட சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டுத்தாபனமாக்கப்பட்டு அமைக்கப்பட்டது. அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 303 என்ற இடத்தில் அமைந்துள்ளது.

| நிதி மற்றும் வங்கி மீதிகள் | | |
| மக்கள் வங்கி ந.க.இ. - 004-1-001-1-0208647 | 681,468 | 294,980 |
| மக்கள் வங்கி ந.க.இ. - 055-1-001-5-0667533 | 873,874 | 502,730 |
| மக்கள் வங்கி ந.க.இ. - 004-1-001-6-0208664 | 8,059,708 | 1,064,374 |
| இலங்கை வங்கி ந.க.இ. - 0002323272 | 10,456,100 | 2,496,651 |
| இலங்கை வங்கி ந.க.இ. - 0002323131 | 537,256 | 276,439 |
| இலங்கை வங்கி ந.க.இ. - 0002323354 | 41,475,925 | 8,442,131 |
| இலங்கை வங்கி ந.க.இ. - 0002323363 | 5,707,301 | 8,444,520 |
| இலங்கை வங்கி ந.க.இ. - 0005002189 | 23,023 | 25,073 |
| | 67,814,655 | 21,546,898 |
| கையிருப்பிலுள்ள நிதி | | |
| சிறு தொகை - பிரதான அலுவலகம் | 28,171 | 27,876 |
| சிறு தொகை - கலையரங்கம் | 1,644 | 4,153 |
| சிறு தொகை - திரைப்படக் கலஞ்சியசாலை | 34 | 34 |
| | 29,849 | 32,063 |
| மொத்தம் | 67,844,504 | 21,578,961 |

| | 2015 | 2014 |
|---|---|---|
| குறிப்பு : 19 | | |
| வழங்கப்பட்டவைகள் | | |
| திரைசேறி வழங்கல்கள் | 166,862,813 | 156,162,990 |
| (-) மெதுவாக நிலைமாறுபவை | 19,917,957 | 19,300,177 |
| | **146,944,856** | **136,862,813** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

**2015 டிசம்பர் 31ஆந் திகதி**

**நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு**

| | **2015** | **2014** |
|---|---|---|
| | **ரூ.** | **ரூ.** |
| குறிப்பு : 20 | | |
| முன் கொண்டுவரப்பட்ட மீதி 01.01.2015 | 34,060,813 | 32,225,488 |
| வருடத்திற்கான ஒதுக்கீடு | 20,485,019 | 4,005,290 |
| நிதி கொடுப்பனவு | (5,153,128) | (2,169,965) |
| | 49,392,704 | 34,060,813 |

(திரைசேறி பற்றுச் சீட்டுக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.)

| | 2015 | 2014 |
|---|---|---|
| குறிப்பு : 21 | | |
| வைப்புக்கள் | | |
| என்.எப்.சீ. திரையரங்குகளில் பினை வைப்பு | 60,000 | 90,000 |
| சிற்றுண்டிச்சாலை வைப்பு | 30,000 | 10,000 |
| பாதுகாப்பு வைப்பு | 2,326,727 | 2,326,727 |
| சேவையாளர்கள் | 5,000 | 5,000 |
| திரைப்பட இறக்குமதி | 7,500 | 7,500 |
| சினிமா திட்டங்கள் | 45,000 | 45,000 |
| | 2,474,227 | 2,484,227 |

| | 2015 | 2014 |
|---|---|---|
| குறிப்பு : 22 | | |
| திரைப்படக் கூலி கடன் உரிமையாளர்கள் | | |
| திரைப்படக் கூலி கடன் உரிமையாளர்கள் | 260,708,496 | 226,657,603 |
| (-) கடன் உரிமையாளர்களுக்காக வேண்டி சேதப்படுத்திகின்ற பொருத்தங்கள் | (18,046,804) | (18,046,804) |
| | 242,661,692 | 208,610,799 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## 2015 டிசம்பர் 31ஆந் திகதி

## நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு

குறிப்பு : 23

**வேறு கடன் உரிமையாளர்கள்**

| | **2015** | **2014** |
|---|---|---|
| | **ரூ.** | **ரூ.** |
| இயல்பான செலவு | 5,953,251 | 6,434,329 |
| செலுத்தப்பட வேண்டிய சேர்த்துக் கொண்ட எண்ணிக்கையின் படி வரி | 152,613 | 152,613 |
| கணக்காய்வு கட்டன ஒதுக்கீடு | 1,486,720 | 986,720 |
| சுங்க ஆணையாளர் (முத்திரை) | 43,030 | 44,380 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப நிதியம் | - | - |
| உரிமை கோரப்படாதவை | 1,025,537 | 889,824 |
| ஊழியர் சேமலாப நிதி | 663,353 | 665,928 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 73,858 | 74,209 |
| வெவ்வேறு கடன் உரிமையாளர்கள் | 2,005,794 | 1,518,910 |
| (-) செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடுகள் | (644,840) | (644,840) |
| வெவ்வேறு கடனாளிகள் (வரவு மீதிக்ள) | 1,245,505 | 1,257,674 |
| திரைப்பட வாடகை கடனாளிகள் | 3,477,940 | 3,704,237 |
| பொதுத் திரைசேறி | 5,000,000 | 5,000,000 |
| தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் | 3,525,795 | 3,569,113 |
| ரித்மா சபை நிருவாகக் கணக்கு | - | 2,078,307 |
| சினே தரு புஞ்சி தாரகா | 31,750 | 31,750 |
| திரைப்பட விழாவிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | 5,000,000 | 5,000,000 |
| உழைக்கும் போது வரி அறவிடல் | 37,939 | 25,577 |
| சம்பளம் மற்றும் வேதனங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கு | 714,182 | 714,182 |
| கிடைக்கப் பெற வேண்டி தயாரிப்பக் கடன் வட்டி ( | 5,381,452 | 5,381,452 |
| | **35,173,879** | **36,884,365** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு**

| | மொத்தம் 2015 | காடசிகள் | கலையரங்கம் | தயாரிப்பு | பொது நிருவாகச் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| பணிப்பாளர் கட்டணம் | 188,550 | - | - | - | 188,550 |
| பிரசாரம் | 274,475 | - | - | - | 274,475 |
| விசேட கொமிசன் கட்டணம் | 93,536 | - | - | - | 93,536 |
| சட்டவியல் கட்டணம் | 791,112 | - | - | - | 791,112 |
| கூட்டுத்தாபன விழாக்கள் | 384,480 | - | - | - | 384,480 |
| கணக்காய்வுக் கட்டணம் | 500,000 | - | - | - | 500,000 |
| பாதுகாப்புச் சேவை | 4,497,885 | - | 1,603,934 | - | 2,893,951 |
| வங்கிக் கட்டணம் | 70,085 | - | - | - | 70,085 |
| பல்வேறு செலவுகள் | 20,815 | - | - | - | 20,815 |
| சினிமா கல்வி | 666,703 | - | - | 666,703 | - |
| வெளி இறங்கல்கள் மற்றும் கலைஞர்களின் செலவு | 185,600 | - | - | - | 185,600 |
| புதிய திரையரங்கு செலவு | 59,803 | - | - | - | 59,803 |
| பணிக்கொடை தண்டப் பணம் | 9,920 | - | - | - | 9,920 |
| செலாவணி விகிதாசார பொருத்தங்கள் | - | - | - | - | - |
| திரை கதை சொல்லுதல் | - | - | - | - | - |
| திரைப்படங்களை பார்த்தல் | 3,000 | - | - | - | 3,000 |
| தாமதக் கட்டணம் | 5,038 | - | - | - | 5,038 |
| டென்டர் செலவு | 6,480 | - | | | 6,480 |
| நிலையான சொத்துக்களை நீக்குதல் | 1 | - | | | 1 |
| | 7,757,483 | - | 1,603,934 | 666,703 | 5,486,846 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு**

| | மொத்தம் 2015 | காடசிகள் | கலையரங்கம் | தயாரிப்பு | பொது நிருவாகச் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| போக்குரவத்து | 123,441 | 90,868 | - | - | 32,573 |
| தொடர்புகள் | 1,662,241 | 274,451 | 199,620 | 234,190 | 953,980 |
| <u>தேவைப்பாடுகள்</u> | | | | | |
| உள்ளக பிரயோகம் | 45,069 | 3,389 | - | - | 41,680 |
| வெளிநாட்டு திரைப்பட விழாக்கள் | 47,152 | - | - | - | 47,152 |
| நலன்புரிச் செலவுகள் | 2,950,815 | - | - | - | 2,950,815 |
| சேவையார் இணைத்துக் கெர்ளளல் ம்றறும் பயிற்சி | 947,231 | - | - | - | 947,231 |
| நீர் பற்றுச் சீட்டு | 180,606 | - | - | - | 180,606 |
| | 4,170,873 | 3,389 | - | - | 4,167,484 |
| வரிபண வரி | 672,409 | - | 62,569 | - | 609,840 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடு தொடர்பனா குறிப்பு**

**2014.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கான வருமானக் கூற்று**

| | SLFRS 2014 | அளவிடக்கூடிய மாற்றங்கள் | SLFRS 2014 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| விற்பனை | 39,591,535 | - | 39,591,535 |
| குறைக்கப்பட்டது. : விற்பனை செலவு | 7,341,871 | | 7,341,871 |
| அன்னளவு இலபாம் | 32,249,664 | - | 32,249,664 |
| குறைக்கப்பட்டது. : செலவு | | | |
| சேவையாளர் சேவை முயற்சிகள் | 62,390,237 | - | 62,390,237 |
| பிரயான மற்றும் வழங்கல் கொடுப்பனவு | 808,155 | - | 808,155 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 7,028,356 | - | 7,028,356 |
| | - | - | |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் கழித்தல் | | | |
| (ஏ)புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் கழித்தல் | 29,487,741 | - | 29,487,741 |
| போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | 18,496,419 | - | 18,496,419 |
| வாராக் கடனிற்காக வேண்டி சேதமாக்கப்பட்ட பொருத்தப்பாடுகள் | 3,750,161 | - | 3,750,161 |
| பணிக்கொடைகளை வேறாக்குதல் | 4,005,290 | | 4,005,290 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் நிதியத்திற்காக வேண்டி வேறாக்குதல் | 200,000 | - | 200,000 |
| பங்கு சேதங்கள் | 21,143 | - | 21,143 |
| | 126,187,502 | - | 126,187,502 |
| பொது நிருவாக செலவுகள் உள்வாங்குதல் | - | - | - |
| | 126,187,502 | - | 126,187,502 |
| செயற்பாட்டு இலாபம் - நட்டம் | (93,937,838) | - | (93,937,838) |
| இணைத்துக் கொண்டவை : வேறு வருமானம் | 55,745,191 | (1,479,672) | 54,265,519 |
| வருடத்தின் நட்டம் - இலாபம் | (38,192,647) | (1,479,672) | (39,672,319) |
| குறைக்கப்பட்டது : திரைசேறியினால் கிடைக்கப்பெற்ற நிதி | 75,000,000 | - | 75,000,000 |
| | 36,807,353 | (1,479,672) | 35,327,681 |
| குறைக்கப்பட்டது : வரிக்காக வேண்டி ஒதுக்கீடு | - | - | |
| குறைவு / மேலதிகம் | **36,807,353** | **(1,479,672)** | **35,327,681** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2015 டிசம்பர் 31ஆந் திகதி
## குறிப்பு

### குறிப்பு இலக்கம் 01

| | | |
|---|---|---|
| (I) | அதிகமாக கணக்கிடப்பட்டுள்ள தயாரிப்புக் கடன் வட்டியினை நீக்குதல் | (32,600.31) |
| (ii) | தண்ட வட்டி நீக்குத் பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 11343.1.1/.5940 இற்கு இணங்க | (392,700.00) |
| (iii) | தயாரிப்புக் கடன்களை ஓரெயடியாகச் செலுததுவதனால் எதிர்காலத்தில் கணக்கிலப்பட்டிருந்த வட்டியினை நீக்குதல் | (1,538,035.25) |
| (iv) | நாமல மாலனி திரையரஙகுகளுககு எறிய இயநதிரஙகள கொளவனவு செய்கின்ற போது டென்டர் செலவுகள் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிருந்தமையை சரிசெய்தல் | 1,000.00 |
| (v) | 2014ஆம் ஆண்டு முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த நிதியினை எதிர்கால வருடத்தின் செலவீட்டுக் கணக்கில் கணக்கு வைத்தல் | 2,600.00 |
| (vi) | நலன்புரிச் சங்கத்திற்கு இறங்கல் முற்பணம் செலுத்திய நிதியினை கட்டுதல், செலவீட்டுக் கணக்கில் கணக்கு வைத்திருந்ததினை சரிசெய்தல் | 1,500.00 |
| (vii) | 2014 இல் ஒன்றுதிரட்டப்பட்டிருந்த செலவுகளை குறைவாகச் செலுத்துல் | 3,374.51 |
| (viii) | 2014ஆம் ஆண்டினுள் நீர் கட்டணச் செலவு இரண்டு முறை கணக்கிடப்பட்டிருந்தமை | 22,800.00 |
| (ix) | DTS Sound விற்பனை விலை கணக்கிட முன்னர் பொருட்கள் விற்பனையின் காரணமாக அதிகமாக விலையிடப்பட்ட நிதி | (41,155.84) |
| (x) | 2011 அதிகம் ஒன்றுதிரடப்பட்டிருந்த நிதியினை நீக்குதல் | 493,545.35 |
| | | **(1,479,671.54)** |

**இணைப்பு**

| | | தர இலக்கம் | பெறுமதி ருபா |
|---|---|---|---|
| பங்குகள் | | | |
| 2011 அதிகமாக விலையிடப்பட்டிருந்ததனை நீக்குதல் | | LKAS 39 | **41155.84** |
| கடனாளிகள் | | | |
| அனுமதி பெற்ற தண்டப் பணங்கள் மற்றும் தயாரிப்பக் கடன்களை நீக்குதல் | | LKAS 39 | |
| | 32,600.31 | | |
| | 392,700.00 | | |
| | 1,538,035.25 | | |
| | (1,000.00) | | **1,962,335.56** |
| **வேறு கடனாளிகள்** | | | |
| முற்பணப் பொருத்தங்கள் | | LKAS 39 | |
| | 2,600.00 | | |
| | 1,500.00 | | **4,100.00** |
| **வேறு கடன் உரிமையாளர்கள்** | | | |
| செலுத்தப்பட முடியாத கடன் உரிமையாளர்கள் | | | |
| | 3,374.51 | | |
| | 493,545.35 | | |
| | 22,800.00 | | **519,719.86** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2015 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடடிற்கான குறிப்பு**

**குறிப்பு : 24**

**பணிப்பாளர் சபை தொடர்பு**

நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களில் விளைவுள் ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. 2015ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை தொடர்பான விரிவான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இலக்கம் | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் | நியமிக்கப்பட்ட திகதி | வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் /முகவரி | முகவரி | தொடர்புபட்ட சாரார்களின் கொடுக்கல் வாங்கல் இயல்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வழக்கறிஞர் திரு. தீபால் சந்திரரத்ன | 2015.03.11 | பணிப்பாளர் சபைத் தலைவர் தலைவர் - இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | தலைவர் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், கொழும்பு 07 | - |
| 2 | திரு. சம்பத் சுபசிங்க ஆரச்சி | 2015.06.23 | செயற்பாட்டு பணிப்பாளர் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | செயற்பாட்டு பணிப்பாளர் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் கொழும்பு 07 | - |
| 3 | பேராசிரியர் திருமதி எஸ்.கே.எம்.டீ. குணதிலக்க | 2015.05.14 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (அதிகாரபூர்வமாக) தகவல் பணிப்பாளர் நாயகம் அரசாங் தகவல் திணைக்களம் | பணிப்பாளர் அரசாங்க தகவல் திணைக்களம் கொழும்பு 05 | - |
| 4 | திருமதி. என். கொடகந்த | 2015.03.26 | திரைசேறி அங்கத்தவர் பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | பணிப்பாளர் நாயகம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு பொதுத் திறைசேறி, கொழும்பு 01 | - |
| 5 | திரு. நயன ஹெட்டியாரச்சி | 2015.04.06 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம். 330/8, சமன் மாவத்தை ஓடை வீதி, பொரலஸ்கமுவை | - |
| 6 | திருமதி. பி.வி.பி. தயாரத்ன | 2015.02.06 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம்.59/3, ஹீனடிகும்புர வடக்கு தலங்கமை, பத்தரமுல்லை | - |
| 7 | விசேட வைத்தியர் திரு. அனில் சமரநாயக்க | 2015.05.14 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம். 182/1, ஹில் வீதி, தெஹிவளை | - |
| 8 | திரு. அமல் அல்விஸ் | 2015.05.14 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம் 262, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை | - |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. } සීඒඑස්/ඊ/එන්එෆ්සී/1/15/20   ඔබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date } 2017 අගෝස්තු 18 දින

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව / NATIONAL FILM CORPORATION OF SRI LANKA / 12 OCT 2018 / මුදල් අංශය / FINANCE DIVISION

සභාපති,

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව.

**ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාවේ 2015 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2017 මැයි 23 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව / NATIONAL FILM CORPORATION OF SRI LANKA / 10 OCT 2017 / සභාපති කාර්යාලය / CHAIRMAN'S OFFICE

ඩබ්ලිව්.ප්‍රේමනන්ද

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත් : 1. ලේකම් - ඉඩම් හා පාර්ලිමේන්තු ප්‍රතිසංස්කරණ අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } சீஏஎஸ்/ஈ/என்எவ்சீ/1/15/20
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2017 மே 23
Date

தலைவர்,
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 44 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி அசைவிற்காக தாக்கமளிக்காத விடயங்களை சீராக்கும் போது முன்னைய காலப்பகுதிக்குரிய ரூபா 1,479,671 திருத்த விடயங்கள் சீராக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டுக்குரிய ரூபா 43,326 தொகையான அந்நியச்செலாவணி வீதங்களின் மாற்றம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் ஸ்ருடியோவிலுள்ள கறுப்பு மற்றும் வெள்ளை மற்றும் நிற ஆய்வுகூடங்களிற்குச் சொந்தமான தொழில்நுட்ப ரீதியாக வழக்கற்றுப் போன பழைய சொத்துக்கள் தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்டு அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக ரூபா 250,899,989 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் அவை மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20**

அரசாங்க மூலதன மானியங்களிற்கான கணக்கீட்டின் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே மானியப் பெறுமதியின் 12.35 சதவீதமும் 11.93 சதவீதமும் காலக்கழிவிடப்பட்டிருந்தன.

**(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38**

சரசவி ஸ்ருடியோவில் உற்பத்திக்குப் பின்னரான நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மென்பொருள் அருவச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு அட்டவணைகளின் பிரகாரம் இருப்புப் பற்றாக்குறைகளாக இனங்காணப்பட்ட ரூபா 944,186 தொகை மற்றும் கணக்காய்வில் சேதங்களாக இனங்காணப்பட்ட ரூபா 175,000 பெறுமதியான 2,500 காபன் கூறுகள் என்பன கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் இறுதி இருப்பு என்பன அதேயளவு தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 50,000 ஆடம்பர வரிப் பணம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) பல ஆண்டுகளாக நிலையான வைப்பு வட்டியிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 3,180,320 கூட்டுமொத்தமான பிடித்துவைத்தல் வரி செலவினமாக பதிவுசெய்யப்படுவதற்குப் பதிலாக சொத்தாக பதிவுசெய்யப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) கணக்கீட்டுத் தவறுகள் காரணமாக ரூபா 1,245,505 கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 8,926,642 கடன்கொடுத்தோர் மீதிகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 4 விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற அட்டவணைகள்/ பேரேட்டு மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையே ரூபா 18,113,637 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் பிரகாரம், அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,525,795 ஆக இருந்த அதேநேரம் அபிவிருத்தி நிதியப் பேரேட்டின் பிரகாரம் பெறவேண்டிய தொகை ரூபா 5,642,590 ஆக இருந்தது. ரூபா 2,116,795 ஆன வேறுபாட்டை இனங்கண்டு சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| (அ) அபிவிருத்தி ஒதுக்கம் | 7,827,785 | ஒதுக்கத்தினை உருவாக்குவதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் |
| (ஆ) திரைப்பட விழாவிற்கான ஒதுக்கீடு | 5,000,000 | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் விரிவான பட்டியல்கள் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர்களின் வரவு மீதி | 8,926,642 | விரிவான பட்டியல்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல், வயதுப் பகுப்பாய்வு |
| (ஈ) | திரைப்பட திரையரங்கு கடன்பட்டோர் செலவு மீதி | 3,477,940 | விரிவான பட்டியல்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல், வயதுப் பகுப்பாய்வு |
| (உ) | மீளப் பெறவேண்டிய வைப்புக்கள் | 773,728 | வைப்புப் பட்டியல்கள் |
| (ஊ) | உரிமை கோரப்படாத கூலிகள் | 387,231 | விபரமான பட்டியல்கள் |
| (எ) | ஸ்ரூடியோ பராமரிப்பிற்கான உதிரிப்பாகங்கள் | 1,472,572 | கொள்வனவிற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், சிட்டைகள், இருப்புப் பதிவேடுகள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டில் சினிமா திரையரங்குகளிற்கு திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை தனியார் சபைகளிற்கு கையளிப்பதற்கு முன்னர் 163 சினிமா திரையரங்குகளிலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 7,604,528 ஆகவும் கையளிக்கப்பட்ட பின்னர் காணப்பட்ட ஆனால் தற்போது மூடப்பட்ட 186 சினிமா திரையரங்குகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 74,412,984 ஆகவும் இருந்தன.

(ஆ) தற்போது செயற்பாட்டிலுள்ள சபைகளிற்குச் சொந்தமான சினிமா திரையரங்குகளிலிருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகை ரூபா 149,054,764 ஆக இருந்தது. மீளாய்வாண்டிலும் அத்தகைய பணத்தை அறவிடுவதற்கான ஆக்கபூர்வமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 651,815 கடன்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்த போதிலும் அதை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 5 ஆண்டுகளிற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 69,303,374 கூட்டுமொத்தமான சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 (2) | வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்டதற்கான நோக்கம் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 666,590 முற்பணம் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 381 (1) | அலுவலக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரூடாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 67,915,601 கூட்டுமொத்தமான கூட்டுத்தாபனத்தின் 9 வங்கிக் கணக்குகளை திறப்பதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பிஈடி/2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | கைத்தொலைபேசிகளை வழங்குவதற்காக ஏற்பட்ட தொலைபேசியின் கிரயம் உரிய உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் இது உரிய நிறுவனத்தால் மீளளிக்கப்படக்கூடாத போதிலும் கூட்டுத்தாபனத்தால் உத்தியோகத்தர்களிற்கு 12 கைத்தொலைபேசிகளை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 254,114 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (இ) 2015 யூலை 22 ஆம் திகதிய அமைப/05/0741/041/012 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களால் கைவிடப்பட்ட செப்பு, பித்தளை அலுமினியம், ஈயம் போன்ற இரும்பற்ற உலோகங்கள் மற்றும் விசேட வகை இரும்பு, இரும்புத் தாது மற்றும் உருக்குத் துண்டுகள் என்பன கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு விற்பனை செய்யப்பட வேண்டிய போதிலும் இரும்புத் துண்டுகள் மற்றும் படச் சுருள்கள் என்பன சரசவி ஸ்ருடியோவிலுள்ள பழைய கட்டிடமொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 36,807,353 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,813,275 மிகையாக இருந்ததால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 15,994,078 ஆன வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வருமானம் ரூபா 6,999,774 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஊழியர் சம்பளங்கள் மற்றும் பணிக்கொடைகளுக்கான ஒதுக்கீடு ரூபா 15,221,078 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்காக பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,417,937 தொகையான மிகையானது தளம்பல்களுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 20,813,275 ஆக அதிகரித்திருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் பங்களிப்பு ரூபா 100,218,715 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் ரூபா 119,585,215 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 2.1:1 ஆக இருந்த போதிலும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட நானாவிதக் கடன்பட்டோர்கள் ரூபா 69,303,374 தொகையான 5 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளை கொண்டிருந்தமையால் கடன்களின் அறவீடு வினைத்திறனானதாக காணப்படாததுடன் போதியளவு திரவத்தன்மையும் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் திரைப்படங்களைத் தயாரித்தல் மற்றும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்குத் தேவையான படச் சுருள்கள், திரைப்படங்கள், புகைப்பட உபகரணம் என்பவற்றை விநியோகித்து வழங்கல், திரைப்படங்களைக் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக திரைப்படங்களை ஏற்றுமதி செய்தல், திரைப்படத் தயாரிப்பிற்கான ஸ்ரூடியோவை ஸ்தாபித்தல் மற்றும திரையரங்கு வசதிகளை வழங்குதல் மற்றும் நிதி ரீதியாக உதவிசெய்தல், திரைப்படத் தயாரிப்பாளர்களிற்கான உபகாரம் செய்தல், பரிசுப்பொருட்கள் மற்றும் விருதுகளை வழங்குதல், கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்து நடாத்துதல், திரைப்பட விழாக்களை நடாத்துதல், திரைப்படங்கள் மீது பருவகால சஞ்சிகைகளை வெளியிடுதல் மற்றும் இலங்கைக்குள்ளேயும் இலங்கைக்கு வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரைப்படக் கைத்தொழிலை மேம்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களின் உயர் தரத்தை பேணுவதற்கும் திரைப்படங்கள் தொடர்பில் கல்வி கற்ற திரைப்படக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கிடையே விநியோகிப்பதற்காகவும் அச்சிடப்பட்ட பத்தாயிரத்து நாற்பத்து ஏழு சஞ்சிகைகள் 2016 செப்தெம்பர் 15 வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) திரைப்படக் கைத்தொழிலை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக்கொண்டு தயாரிப்பாளர்களிற்கு திரைப்படங்களின் தயாரிப்பிற்கான நிதி உதவிகளை வழங்குவது நோக்கமாக இருந்தபோதிலும் அவ்வாறான தயாரிப்புக் கடன்கள் எதுவும் 2012 இலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைக்குள்ளேயும் அதே போல் வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பில் சந்தை ஆய்வுகளை நடாத்துவதால் அத்தகைய நோக்கங்களை அடைவதற்கு அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைவதற்காக ரூபா 66.84 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2015

திசெம்பர் 31 வரையிலும் ரூபா 3.7 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளில் 28.5 சதவீதம் (56 இல் 16) அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் 35.7 சதவீதம் (20) போதுமானளவு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு விசேட பிரிவொன்று கூட்டுத்தாபனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் பார்வையாளர்கள் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்களிடமிருந்து திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் கூட்டுத்தாபனத்தின் எந்தப் பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறப்பட்ட முறைப்பாடுகளை உரிய பிரிவுகளிற்கு தெரியப்படுத்தி கால ரீதியாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் திரைப்படக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இலங்கையரை இனங்கண்டு பாதுகாப்பதன் மூலம் படைப்புக்களை மீளத் தயாரித்தல், சர்வதேச மட்டத்தை அடைதல் என்பன கூட்டுத்தாபனத்தின் தூரநோக்காக உள்ள போதிலும் வேண்டப்பட்ட நிதி உதவி புதிய தயாரிப்பாளர்களிற்கு வழங்கப்பட்டிருக்காததால் அவர்களால் முன்னோக்கி வர முடியாதிருந்தது. ஆகையால், கருத்துள்ள படைப்புக்களை தயாரிப்பதற்குப் பதிலாக வணிக ரீதியான திரைப்படங்களை முன்வைப்பதன் மூலம் பணமீட்டுவதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சரசவி ஸ்ரூடியோவில் திரைப்படத் தயாரிப்பிற்கு பின்னரான வசதிகளின் முன்னேற்றத்திற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 30,000,000 திறைசேரி நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்தின் குறிப்புரைகளுடன் அவை இணங்காததால் பின்னர் அவை இரத்துச் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ரூபா 1,145,840 தொகை புதிய குறிப்புரைகளை தயாரிப்பதற்காகவும் எதிர்கால நடவடிக்கைக்காகவும் 2015 திசெம்பர் 31 அளவில் இந்தியன் மதியுரையாளரிற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் 30 வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூர் சினிமாக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக திரைப்படங்களை தயாரிப்பதற்கு கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் தயாரிப்புச் செயன்முன்னேற்றம் மீளாய்வுசெய்யப்படாமல் முழுக் கடனும் ஒரு தடவையில் வழங்கப்பட்டிருந்ததுடன் கடனை அறவிடுவதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாததால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரைப்படங்களின் தயாரிப்பிற்காக வழங்கப்பட்ட ரூபா 95,474,170 கடனில் காட்சிப்படுத்தப்படாத திரைப்படங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 14,271,266 தொகையும் காட்சிப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட திரைப்படங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 44,531,267 தொகையும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தன.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தின் நூலகத்திற்குச் சொந்தமாக 414 புத்தகங்கள் மற்றும் 527 டிவீடிக்கள் (DVDs) காணப்பட்ட போதிலும் பயன்பாட்டாளர்களின் உபயோகத்திற்காக அவற்றின் மீது வேண்டப்பட்ட வசதிகள் நூலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் தனியார் வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் ரூபா 250,000 ஆகக் குறைந்த மீதியைப் பேணாததால் ரூபா 100,949 மீதியானது ஆண்டொன்றிற்கு ரூபா 10,000 படி ரூபா 60,949 வரை குறைந்திருந்தது. அந்த வங்கிக் கணக்கு மீதி கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சரசவி ஸ்ருடியோவின் கறுப்பு வெள்ளை மற்றும் நிற ஆய்வுகூடங்களில் காணப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு பதிவுசெய்யப்பட்டோ அல்லது கணக்கீடு செய்யப்பட்டோ இருக்காததுடன் தொழில்நுட்பம் காலாவதியானதன் காரணமாக பாவனையற்றிருந்தன. சில இயந்திரங்கள் நிறுவப்பட்டிருந்த கட்டிடங்களில் பிராணிகள் உட்செல்வதால் அந்த இயந்திரங்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுததலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 156,800 பெறுமதியான முச்சக்கரவண்டியொன்று 2014 மாாச் மாதத்திலிருந்து திருத்தப்படாததால் ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) தலைமை அலுவலக நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட நூலகப் புத்தகங்கள் களனி சரசவி ஸ்ரூடியோவில் பாதுகாப்பற்று குவிக்கப்பட்டிருந்ததால் சிதைவடைந்திருந்தன.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பல்வேறு காரணங்களினால் சேவைகள் முடிவுறுத்தப்பட்ட 8 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 161,816 பெறுமதியான கைத்தொலைபேசிகள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.7 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூர் வழங்குநர்கள் வரையறுக்கப்பட்டிருக்கும் போதும் சர்வதேச ரீதியாக விலைமனுக்களை கோரும் போதும் சர்வதேச ரீதியாக பிரசித்தப்படுத்தல் வேண்டும். இருந்த போதிலும் இந்தியாவிலிருந்து காபன் சுருள்களை கொள்வனவு செய்வதில் கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகி 5 ஆண்டுகளிற்கு தொடர்ச்சியாக ஒரு வழங்குநரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் சிற்றூண்டிச்சாலையின் செயற்பாட்டிற்காக கொள்வனவுச் செயன்முறையிலிருந்து விலகி ரூபா 10,000 மாதாந்த வடகையில் குத்தகையாளர் தெரிவுசெய்யப்பட்டு எழுத்து மூலமான உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமல் விற்பனை செய்யும் உரிமையை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், குத்தகையாளர் முறையான சேவையை வழங்காததால் 2015 நவம்பரிலிருந்து அகற்றப்பட்டு சிற்றூண்டிச்சாலை மூடப்பட்டிருந்தது. மேலும், குத்தகையாளர் கூட்டுத்தாபனத்திற்கெதிராக வழக்குத் தொடுத்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் தனியார் சட்டத்தரணியொருவருக்கு அந்த வழக்கின் சட்டக் கட்டணங்களாக ரூபா 98,950 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.

## 4.8 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக 67 பதவிகள் காணப்பட்டதுடன் கூட்டத்தாபனத்தின் முக்கிய பதவிநிலை பதவிகள் 03 ஆக 03 தொடக்கம் 06 ஆண்டுகளிற்கிடையில் குறைவடைந்திருந்ததனால் உயர் முகாமைத்துவத்தின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் திட்டமிடுதல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான பணிப்புரைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்காக 2015 யூன் 15 இல் ரூபா 17,413 செலவிடப்பட்டு 06 புதினப் பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை கவனத்திற்கொண்டு நேர்முகப்பரீட்சையை நடாத்துவதற்கோ அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ 2016 நவம்பர் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்ததிலிருந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 12 இல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2012 – 2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் 2015 ஆம் ஆண்டிற்குப் பொருத்தமானதாக இது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 – 2015 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காலாண்டு ரீதியாக இலக்கிடப்பட்ட நடவடிக்கைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதன் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட எழுத்து மூல அறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்காக 45 கணக்காய்வு ஐயவினாக்களும் 2014 ஆம் ஆண்டிற்காக 36 ஐயவினாக்களும் மீளாய்வாண்டிற்காக 41 ஐயவினாக்களும் ஆக 122 ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவத்தால் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அத்தகைய ஐயவினாக்களின் பிரதிகள் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 03 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும் 2016 நவம்பர் 30 இல் உள்ளவாறு ஒரு உதவியாளர் மாத்திரம் சேவையிலிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 அளவில் அவர் கூட்டுத்தாபனத்தை விட்டுச்சென்றிருந்தார்.

## 5.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக்குறைந்தது 03 மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 5.6 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது 3 அண்டகள் காலப்பகுதிக்காக பிரதான கொள்வனவுத் திட்டமும் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவுக் கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5.7 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கைகள் 2017 ஏப்ரல்30 வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டப்பாடு | (i) இனங்காணப்பட்டு ஸ்ரூடியோவில் காணப்பட்ட விளைவற்ற சொத்துக்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நூலகப் புத்தகங்கள் பாதுகாப்பின்றிக் காணப்பட்டன. |
| | (iii) பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களை இனங்காண்பதற்கு இயலுமானதாக இருப்புப் புத்தகம் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) 10 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாத கடன் அல்லது மீதிகள் காணப்படுதல். |

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**National Film Corporation of Sri Lanka**

අංක 303, බෞද්ධාලෝක මාවත, කොළඹ 07. | දුරකතන - 0112-584623 / 0112-588773 | විද්‍යුත් තැපෑල-filmcorp@sltnet.lk | වෙබ් අඩවිය -www.nfc.gov.lk
இல.303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. | தொலைபேசி-0112-584623 / 0112-588773 | மின்னஞ்சல் புத்குகதுகுின்-filmcorp@sltnet.lk | இணையத்குளம்-www.nfc.gov.lk
No.303, Bauddhloka Mawatha, Colombo 07. | Tel - 0112-584623 / 0112-588773 | Email-filmcorp@sltnet.lk | Website-www.nfc.gov.lk